**10.01.2025**

**இ.தி.மு.மனு எண்.10 /2023**

**ம.சா.1 - திரு. பொன்சுரேஷ்**

**சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை படித்து பார்த்துள்ளேன். எதிர்மனுதாரர் என்னுடன் சேர்நது வாழ விரும்புவதாக என்று எதிருரையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் துணை இராணுவத்தில் ரேபிட் போர்ஸ்-ல் கான்ஸ்டபிளாக இருக்கிறேன். எனக்கு மாதம் ரூ.48,500/- ஊதியம். எதிர்மனுதாரருக்கு மாதம் ரூ.10,000/- ஜீவனாம்சம் ரூபாய் கொடுத்து வருகிறேன். எதிர்மனுதாரர் என்னுடன் ஆன திருமணததிற்கு பிறகு என்னுடைய வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். எதிர்மனுதாரர் குடியிருக்கும் வீட்டில் நானும் என் அப்பாவும் குடியிருக்கவில்லை. என்னுடைய பணிபதிவேட்டில் எதிர்மனுதாரரை என்னுடைய மனைவி என காட்டியுள்ளேனா என்றால் இல்லை எனக்கு 2 வது திருமணம் நடந்துள்ளதா என்றால் இல்லை. எனக்கும் எதிர்மனுதாருக்கும் 28.10.2015 ம் தேதியன்று திருமணம் நடந்தது. எதிர்மனுதார் குடியிருந்து வரும் வீட்டில் அவருடன் பிரச்சனை செய்து அவரை குடியிருக்க விடாமல் தகராறு செய்தேன் என்பதால் நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குடியிருக்கும் வீட்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் குடிநீர் இணைப்பை நான் துண்டித்து விட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் என் மீது எந்த காவல்நிலையத்திலும் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல புகார் கொடுத்துள்ளார் வழக்கு பதிவு செய்யவில்லை அவர் கொடுத்ததகா சொல்லும் புகாரை நான் என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதார் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற காரணத்திற்காக தான் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து என்னுடைய வீடடில் குடியிருக்க அனுமதி கேட்டு குடியிருக்கிறார் என்றால் சரியல்ல இதுநாள் வரை என்னுடன் ஒரு நாள் கூட வாழவில்லை. அந்த வீட்டில் எதிர்மனுதார் குடியிரப்பதால் நானும் என் அபெற்றோரும் அங்குவராமல் ஊதை காலி செய்து விட்டு போனோம் என் ாறல் சரியல்ல நானும் என் அம்மாவும் வந்தோம் ஊரே

திரட்டி வந்து விரட்டிவிட்டார்கள். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன் எதிர்மனுதாரர் பி.எஸ்.சி. , பி.எட்., பிஜிடிசி படித்துள்ளார். திருமணத்தின் போது எதிர்மனுதாரருக்கு எவ்வளவு நகை கொடுத்தார்கள் என்றால் நாங்கள் கேட்கவில்லை அவர்கள் எவ்வளவு கொடுத்தார்கள் என தெரியாது எதிர்மனுதாரரின் நகைகள் சில என் பாதுகாப்பில் உள்ளது என்று சொன்னால் இல்லை. திருமணத்திற்கு முன்பு நான் எதிர்மனுதாருக்கு சமமாக படிக்கவில்லை என்பதால் திருமணம் தொடர வேண்டாம் என திருமணத்தை நிறுத்தி விடும்படி சொன்னேன் என்றால்சரியல்ல. புரோக்கர் சொன்னபடி எதிர்மனுதர் வீட்டில் நான் எம்.ஏ வரை படித்ததாக சொன்னதை பார்த்து திருமணத்தை நிறுத்த சொல்லி பழவூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் மனுவையோ, மனு ஏற்பு ரசீதையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தான் பொய்யாக தகவல் சொல்லி திருமணத்தை நிறுத்த ஏற்பாடு செய்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதரர் என் மீது கொடுமை செய்ததாக நான் சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல நான் சொன்ன மாதிரி எதிர்மனுதாரர் என்னை எந்த கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதார் வேறு ஒரு நபருடன் இருப்பதாக கூறுவது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. நான் சொல்லும் நபர் எதிர்மனுதாரருக்கு தம்பி என்றால் சரியல்ல. 26.03.2018 ம் தேதியன்று நான் தான் விஷம் அருந்தினேன். அதுசம்பந்தமாக மருத்துவமனையில சிகிச்சை எடுத்ததாக சொல்லியுள்ளேன் அதற்கான மருத்துவமனை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மருத்துவக்குழுக்கு எனது மனநல பரிசோதனைக்காக அனுப்பட்டேன் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். கேரளா மாநிலம் பள்ளிபுரத்தில் நான் எடுத்துக்கொண்ட சிகிச்சை விபரத்தை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய ஆவணங்களும் பொருட்களும் எதிர்மனுதாரர் வீட்டில் இருப்பதாக சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. எனக்கே தெரிந்த காரணத்திற்காக எதிர்மனுதாரரிடம் சேர்ந்து வாழ நான் மறுத்து வருகிறேன் அது எதிர்மனுதாருககு செய்யப்படும் அநீதி என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ கடமைப்பட்டேன் என்றால் சரியல்ல. நான் செய்துள்ள அனைத்து தவறுகளையும் மன்னித்து எதிர்மனுதார் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால்சரியல்ல

நான் தயாராக இல்லை. அதனால் தான் எதிர்மனுதார் தாக்கல் செய்த எதிருரையில் என் மீது எந்த குற்றசாட்டும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவருடைய ஜீவனத்திற்காகவும் குடியிருப்புக்காகவும் மட்டுமே குற்றவியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் எ்னறும் என்னை பழிவாங்கும் எண்ணதில் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல வேலை பார்க்கம் இடத்தில் மனு கொடுத்துள்ளார். வேலை பார்க்கம் இடத்தில் கொடு்த மனுக்கள் அனைத்தும் என்னுடன் சேர்நது வாழ வேண்டும் என பரிகாரம் கேட்டு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல நான் இறந்த பிறகு என்னுடைய வேலையை அவருக்கு கொடக்க வேண்டும் என்றும் எனக்கு வரக்கூடிய பணம் அவருக்கு கிடைக்க வேண்டும் என்றும் அவர் மட்டுமே மனைவி என புகார் கொடுத்துள்ளார். இதற்கு முன்பு நாகர்கோவில் நீதிமன்றத்தில் HMOP 68/2018 எனற மனுவை தாக்கல் செய்திருந்தேன் அந்த மனு சம்பந்தமாக எந்த ஒரு ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த மனுவில் விவாகரத்து வழங்குவதற்கு வலுவான காரணம் இல்லை என்பதால் நான் தாக்கல் செய்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிரிடை கோரிக்கை மனு அனுமதிக்கத்தது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை -</u> இல்லை**